செ. கு. எண்: 064 நாள் :08.08.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.8.2015

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. J. சுப்பையா, தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S. ஆறுமுகம், முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S. தவசீலன் ஆகியோர் 29.6.2015 அன்று மரக்காணம் வட்டம், ஆலம்பாக்கம் கிராமம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.P.முருகேசன் அவர்கள் 1.6.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.நீலமோகன் அவர்கள் 3.6.2015 அன்று சிதம்பரம் புறவழிச் சாலை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், உக்கடம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.ஆனந்தன் அவர்கள் 18.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் நகரக் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G. குமாரசாமி அவர்கள் 23.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகரக் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.கலைமணி அவர்கள் 23.6.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், திருநகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. V.ஜோதிகரன் அவர்கள் 1.7.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், காட்பாடி போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. வாசுதேவன் அவர்கள் 2.7.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வச்சக்காரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.இராதாகிருஷ்ணன் அவர்கள் 4.7.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுப்பையா, குமாரசாமி, கலைமணி, வாசுதேவன், இராதாகிருஷ்ணன்; தலைமைக் காவலர்கள் ஆறுமுகம், முருகேசன், நீலமோகன், ஆனந்தன், ஜோதிகரன். முதல்நிலைக் காவலர் தவசீலன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**